சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

MCOP No. 74/2018

பெயர். திருமதி. சரிதா நாள் 17.03.2025
க /பெ. ரஜினி செல்வம்

<u>மனுதாரர் சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) என் மகளுக்கு அடிப்படும்பொழுது 2 வயது. காவல் நிலையத்தில் புகாரை நான்தான் கொடுத்தேன். புகாரில் உள்ள விவரங்கள் சரிதான். என் மகள் சாலையைக் கடக்கும் பொழுது விபத்து ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்து ஏற்பட்டவுடன் என்மகளை செட்டிநாடு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். என் மகள் விபத்தின்பொழுது 2ம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தார். விபத்துப் பதிவேடு நகலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ம.த.சா.ஆ.2 ஆங்கிலத்தில் உள்ளதால் எனக்கு படிக்கத் தெரியாது. ம.த.சா.ஆ.2ல் என் மகள் சாலையைக் கடக்கும் போது விபத்து நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் மகளுக்கு எலும்பு முறிவு ஏற்பட்டது. ஆனால் கட்டு போடவில்லை. விபத்து ஏற்படுத்திய வாகனததிற்கு முறையான தகுதிச் சான்றிதழ் மற்றும் அனுமதிச் சான்றிதழ் இல்லை என்று சொன்னால் சரியல்ல. என் குழந்தையின் வயதை தவறான சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. ம.த.சா.ஆ.4 கிற்கான தனித்தனி ரசீதுகள் என்னிடம் இல்லை. என் கணவர் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளார். தனித்தனி ரசீதில்லாமல் ம.த.சா.ஆ.4 தயார் செய்யப்பட்டது என்றால் சரியலல. விபத்தில் ஏற்பட்ட காயங்கள் சொற்ப காயங்கள் என்றாலும், மனுவிற்காக கொடுங்காயங்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து மனு அதிகபட்ச செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரயில்ல.

மறுவிசாரணை – இல்லை.